1990 சனவரி 25]

10-35 மணி

4. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு ;

* திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் 1989–90 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 23 முதல் 25 வரையிலான (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

5. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம்)

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் (குறுக்கீடு) யாராவது ஒருவர் சுருக்கமாகச் சொல்லவும்.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, Introduction stage-ல் object பண்ணுகிறோம். (குறுக்கீடு) நாங்கள் அறிமுகம் செய்கிற நிலையிலேயே இச் சட்ட முன்வடிவை எதிர்க்கிறோம்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன் என்பது ஒரு சம்பிரதாயம். அதன்படி அவர்கள் விளக்கங்களைப் பின்னால் பேசிக்கொள்ளலாம்; ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்பொழுது பேசிக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS